நமது தின கனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI
தமிழ் நாளிதழ்




| Vol: 02 | Issue: 15 | 4 Pages | 15.8.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 15 | 4 பக்கங்கள் | 15.8.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை**
**இகழ்வாரை நோவ தெவன்**

**விளக்கம்:**

தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழமுடியாதவர் தம்மைத் தாம் நொந்து கொள்ளாமல் தம்மை இகழ்கின்றவரை நொந்து கொள்ளக் காரணம் என்ன?

## தந்தை சிலையை சேதப்படுத்தியதற்கு நீதி கேட்கும் ஷேக் ஹசீனா



வங்கதேசம், ஆக. 15

வங்கதேசத்தில் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும் என மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இதன் காரணமாக ஷேக் ஹசீனா வேறு வழியின்றி தனது பதவியை ராஜினாமா செய்தார். பின்னர் ராணுவ உதவியுடன் இந்தியா வந்தடைந்தார்.

ஷேக் ஹசீனா மீண்டும் வங்கதேசம் செல்வாரா? இந்தியாவில் தொடர்ந்து தங்கியிருப்பாரா? இங்கிலாந்து அடைக்கலம் கொடுக்குமா? என்பதற்கு விடை கிடைக்காமல் உள்ளது.

இதற்கிடையே ஷேக் ஹசீனா கடந்த வாரம் திங்கட்கிழமை (ஆகஸ்ட் 5) தனது பதவியை ராஜினாமா செய்தார். அதன்பின் நடந்த வன்முறையில் 230க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இன்னும் வன்முறை முடிவுக்க வந்த பாடில்லை.

இந்த நிலையில் ஷேக் ஹசீனா இந்தியா வந்த பிறகு முதன்முறையாக வங்கதேச வன்முறை குறித்து கருத்து தெரிவித்துள்ளார். ஷேக் ஹசீனா வங்காளதேச வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும். வங்கதேசத்தின் தேசிய தந்தையான எனது தந்தை ஷேக் முஜிபுர் ரஹ்மான் சிலையை சேதப்படுத்தியதற்கு நீதி வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் ஷேக் ஹசீனா மீது கொலை வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

## நியூசிலாந்தை விட்டு வெளியேறி வேறு நாடுகளுக்கு குடிபெயரும் மக்கள் ஏன் தெரியுமா?

நியூசிலாந்து, ஆக. 15


நியூசிலாந்து நாட்டில் இருந்து எண்ணற்ற மக்கள் வெளியேறி வேறு நாடுகளுக்கு குடி பெயர்ந்து வருகின்றனர்.

அந்நாட்டில் அதிகரித்துள்ள வேலைவாய்ப்பின்மை பிரச்சனை, பொருளாதார மந்தநிலை மற்றும் வட்டி விகிதங்கள் உயர்வால் மக்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர்.

கடந்த 1 வருடத்தில் மட்டும் நியூசிலாந்து நாட்டில் இருந்து 1,31,200 மக்கள் வெளியேறியுள்ளனர். இந்த எண்ணிக்கை வேறு எப்போதும் இல்லாத அளவிற்கு மிக அதிகமானதாகும்.

நாட்டை விட்டு வெளியேறிய மக்களின் மூன்றில் ஒருபங்கினர் ஆஸ்திரேலியா நாட்டிற்கு குடிபெயர்ந்துள்ளனர்.

## இஸ்ரேல் டெல் அவிவ் மீது எம்90 ராக்கெட்: தாக்குதல் நடத்திய ஹமாஸ்



காசா, ஆக. 15

மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம் உருவாகியுள்ள நிலையில், பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்கள் அபாய கட்டத்தை எட்டியுள்ளது.

கடந்த அக்டோபர் 7ம் தேதி முதல் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் இதுவரை 40,000 க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, இஸ்ரேலுக்கு தக்க பாடம் கற்பிப்போம் என ஹமாஸ் தெரிவித்தது. இந்நிலையில், இஸ்ரேலின் டெல் அவிவ் நகரை நோக்கி எம் 90 ராக்கெட்டுகளை ஏவி தாக்குதல் நடத்தி உள்ளோம் என ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக இஸ்ரேல் ராணுவம் கூறுகையில், சிறிது நேரத்திற்கு முன் ஒரு ஏவுகணை காசா பகுதியின் எல்லையைக் கடந்து நாட்டின் மையத்தில் உள்ள கடல் பகுதியில் விழுந்தது கண்டறியப்பட்டது. இஸ்ரேலுக்குள் செல்லாத மற்றொரு ஏவுகணையும் கண்டறியப்பட்டது என தெரிவித்துள்ளது.

## கோவிலுக்கு சென்ற முகமது யூனுஸ்: உரிமைகள் அனைவருக்கும் சமம் என இந்துக்களுக்கு உறுதி



வங்கதேசம், ஆக. 15

வங்கதேசத்தில் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவுக்கு எதிராக மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

இதனால் கடந்த 5ந்தேதி ஷேக் ஹசீனா தனது பதவியை ராஜினாமா செய்தார். அதனைத் தொடர்ந்து அரசு கவிழ்ந்தது.

அதன்பின் போராட்டக்காரர்கள் பொதுச் சொத்துகளை நாசப்படுத்த தொடங்கினர். ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி தலைவர்களுக்கு சொந்தமான இடங்களை தீவைத்து கொளுத்தினர். மைனாரிட்டி இந்துகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தினர். அவாமி கட்சிக்கு ஆதரவு தெரிவித்து வந்த இரண்டு தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

ஒரு கட்டத்திற்குப் பிறகு பாதுகாப்பு கேட்டு இந்துக்களும் போராட்டத்தில் குதித்தனர். ஷேக் ஹசீனா பதவி விலகி ஒரு வாரத்திற்கும் மேலாகியும் வன்முறை முடிவுக்கு வரவில்லை. இதற்கிடையே நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் போராட்டத்தை கைவிட்டு அமைதி திரும்ப ஒத்துழைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில் முகமது யூனுஸ் டாக்காவில் உள்ள புகழ் வாய்ந்த தாகேஷ்வரி கோவிலுக்கு சென்றார். பின்னர் "உரிமைகள் அனைவருக்கும் சமமானது. வங்காளதேசத்தில் உள்ள மைனாரிட்டிகளின் பாதுகாப்புக்கு உறுதி அளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

மேலும், நாம் அனைவரும் ஒரே உரிமை கொண்ட மக்கள். நமக்குள் எந்த வேறுபாட்டையும் காட்ட வேண்டாம். தயவுசெய்து எங்களுக்கு உதவுங்கள். பொறுமையை கடைப்பிடிக்கவும், எங்களால் என்ன செய்ய முடிந்தது மற்றும் செய்யவில்லை என்பது குறித்து பின்னர்தீர்ப்பளிக்கவும். தோல்வியடைந்தால், எங்களை விமர்சியுங்கள் எனத் தெரிவித்தார்.

# இன்று வங்கி கணக்கில் வரும் ரூ.1000: புது ரேஷன் அட்டைதாரர்களுக்கு மகளிர் உரிமை தொகை?



சென்னை, ஆக. 15

தமிழ்நாடு முழுக்க புதிய ரேஷன் கார்டு வழங்கும் பணி தொடங்கி உள்ளது. புதிய ரேஷன் கார்டுகள் ஏற்கனவே பலருக்கு வழங்கப்பட்டு விட்டன. இதில் குடும்ப தலைவி ஆகும் பெண்களுக்கும மகளிர் உரிமை தொகை எப்போது வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. நாளை இந்த மாதத்திற்கான மகளிர் உரிமை தொகை வழங்கப்பட உள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் காரணமாக புதிய கார்டுகள் வழங்கும் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. புதிதாக ரேஷன் கார்டுகள் கேட்டு 2.8 லட்சம் பேர் விண்ணப்பம் செய்துள்ளனர். இந்தபணிகளைவிரைந்து முடிக்க தமிழ்நாடு அரசு நுகர்பொருள்வாணிபகழகம் முடிவு செய்துள்ளது. இதன்படி புதிதாக 2.8 லட்சம் புதிய ரேஷன் அட்டை வழங்கும் பணி தொடங்கியுள்ளது. புதிய ரேஷன் அட்டை கோரி இதுவரை 2.8 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

மக்களவைத் தேர்தல் காரணமாக புதிய ரேஷன் அட்டை வழங்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மக்களவைத் தேர்தல் முடிந்த நிலையில் புதிய ரேஷன் அட்டை வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது என்று உணவுப்பொருள் வழங்கல் துறை தெரிவித்துள்ளது. கடந்த 2 வாரமாக தினமும் புதிய ரேஷன் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மகளிர் உரிமை தொகை: ஏற்கனவே மகளிர் உரிமை தொகை திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தின் விரிவாக்கத்திற்கு பின்பும் நீங்கள் அதில் தேர்வு செய்யப்படவில்லை என்றால் அதற்கு முக்கியமான சில காரணங்கள் உள்ளன.

முன்னாள் அரசு ஊழியர்களின் மனைவிகள், கார்ப்பரேஷன் ஊழியர்களின் மனைவிகள் ஆகியோர்களுக்கு எல்லாம் இந்த திட்டத்தில் வாய்ப்பு வழங்கப்பட்டு உள்ளது. ஆனால் ஏற்கனவே பென்ஷன் பெறக்கூடிய பெண்கள், அரசின் வேறு நிதிகளை வங்கியில் பெற கூடிய பெண்களுக்கு பணம் வழங்கப்படவில்லை.

வேறு சில ஆவணங்கள் சரியாக இல்லாத பெண்களுக்கும் பணம் வழங்கப்படவில்லை. பென்ஷன் பெறக்கூடிய பெண்கள், அரசின் வேறு நிதிகளை வங்கியில் பெற கூடிய பெண்களுக்கு இந்த திட்டத்தில் இப்போது என்று இல்லாமல் எதிர்காலத்திலும் வாய்ப்பு வழங்கப்படாது.

மாறாக ஆவணங்கள் சரியில்லாத பெண்கள், இனி திருமணம் ஆகி குடும்ப தலைவி ஆகும் பெண்கள் ரூ.1000 பெறுவதற்கு விபத்துப்பம் செய்யலாம். இப்போது செய்ய முடியாது என்றாலும் அடுத்த 4 மாதங்களுக்கு பின் திட்டத்தை விரிவாக்கம் செய்வது தொடர்பான அறிவிப்பு வெளியாகலாம் என்கிறார்கள். அப்போது புதிய ரேஷன் கார்டு பெற்றவர்கள் விண்ணப்பங்களை மேற்கொள்ளலாம். அப்போது விடுபட்டவர்கள் விண்ணப்பங்களை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

திட்ட விரிவாக்கம்; கடந்த மாதம் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தில் மேல்முறையீடு செய்த ஒரு லட்சத்து 48 ஆயிரம் பயனாளிகளுக்கு வங்கிக் கணக்கில் ரூ.1000 வரவு வைக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த திட்டம் மேலும் விரிவாக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இது தொடர்பாக அரசு தரப்பு அதிகாரிகள் நம்மிடம் சில முக்கிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

கலைஞர்உரிமை தொகைதிட்டத்தில் புதிதாக இணைக்கப்பட்டவர்களுக்கு பணம் வழங்கப்பட்டது. கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தில் மேல்முறையீடு செய்த ஒரு லட்சத்து 48 ஆயிரம் பயனாளிகளுக்கு வங்கிக் கணக்கில் ரூ.1000 வரவு வைக்கப்பட்டது .

கடந்த மாதம் வரை 1.15 கோடி பேர், மகளிர்உரிமைத்தொகை பெற்றனர்; தற்போது மேலும் 1 லட்சத்து 48 ஆயிரம் பேருக்கு உரிமைத் தொகை தரப்பட்டுள்ளது.

மேலும் விரிவாக்கம்: இதை மேலும்விரிவாக்கம்செய்யவாய்ப்பு உள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது. இது தொடர்பாக அரசு தரப்பிடம் விசாரித்த போது, இனி அடுத்த வருடம் மீண்டும் இந்த திட்டம் விரிவாக்கப்படும். அப்போது புதிதாக திருமணம் ஆனவர்கள், அரசு பணியில் இருந்து காலமான ஆண்களின் மனைவிகள் வரும் வருடங்களில் தொடர்ந்து விண்ணப்பிக்கலாம்.

வ்வொரு வருடமும் புதிய பயனாளிகள் கண்டிப்பாக இணைக்கப்படுவார்கள் என்று அரசு தரப்பு அதிகாரிகள் நம்மிடம் தெரிவித்து உள்ளனர். 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டது. குடும்பத்திற்காக வாழ் நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்பதாகும்.

சமூகத்தில் வெற்றி பெறக்கூடிய ஒவ்வொரு ஆணுக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பார் என்று கூறுவதுண்டு. உண்மையில், ஒவ்வொரு நாளும் தன் திறனுக்கேற்ற பணிபுரிந்து, பொருள் ஈட்டும் ஒவ்வொரு ஆணுக்குப் பின்னாலும், அவரது தாய், சகோதரி, மனைவி, மகள் ஆகிய பெண்களின் பல மணிநேர உழைப்பு மறைந்து இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

திட்டத்தின் நோக்கம்: ஒவ்வொரு ஆணின் வெற்றிக்காகவும், அவரவர் குழந்தைகளின் கல்வி, உடல் நலம் காக்கவும் இந்தச் சமூகத்திற்காகவும், வீட்டிலும், வெளியிலும் ஒரு நாளைக்குப் பல மணி நேரம் பெண்கள் உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த உழைப்புக்கு ஊதியம் கணக்கிடப்பட்டிருந்தால், குடும்பச்சொத்துகள் அனைத்திலும் சமமாகப் பெண்கள் பெயரும், சட்டம் இயற்றாமலேயே இடம் பெற்றிருக்கும்.

# வில்லங்க சான்றிதழில் வில்லங்கம்.. மோசடி பத்திரங்களும் மிரட்டுதே.. பதிவுத்துறைக்கு பெயிராவின் கோரிக்கை

சென்னை, ஆக. 15

மோசடி ஆவணங்களை மாவட்ட பதிவாளர் ரத்து செய்யும் சட்டத்தை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ள நிலையில், இது சம்பந்தமான உரிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசுக்கு பெயிரா கோரிக்கை விடுத்துள்ளது.

அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் நிறுவனர் மற்றும் தேசியத் தலைவர் டாக்டர் ஆ. ஹென்றி தமிழ்நாடு பதிவுத்துறை தலைவருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.. அந்த கடிதத்தில், பொதுமக்கள்நலன்கருதி, முக்கிய கோரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார். அந்த கடிதத்தில் உள்ளதாவது:

"ஆள்மாறாட்டம்மற்றும்போலி ஆவணம் மூலம் மோசடியாக உரிமையாளருக்கு தெரியாமல் சார் பதிவாளர்களால் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் ஆவணங்களை மாவட்ட பதிவாளர் ரத்து செய்யும் வகையில், தமிழ்நாடு அரசிதழ் வெளியீட்டு எண். 428, நாள். 16.08.2022, அன்று தமிழ்நாடு அரசு சட்ட எண். 41/2022, மூலம் பதிவுச் சட்டம் 1908 பிரிவு 22(B), 77(A), 77(B), 81A, 81B, ஆகிய 5 பிரிவுகளை உட்புகுத்தி திருத்தம் கொண்டு வந்தது.

பதிவுத்துறை: இதுகுறித்து பதிவுத்துறை தலைவர் அவர்களின் கடித எண். 24819/சி1/2021, நாள். 14.09.2022, மூலம் மேற்கண்ட சட்டம் 16.08.2022 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என அனைத்து நிலை பதிவு அலுவலகங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பதிவு சட்டத்தில் புதிதாக கொண்டு வந்துள்ள பிரிவு 77ஏ, மற்றும்77பிஆகியபிரிவுகளின்கீழ் ஆள்மாறாட்டம் மூலமும் போலி ஆவணங்கள் மூலமும் பதியப்பட்ட மோசடி பத்திரங்களை மாவட்ட பதிவாளரே ரத்து செய்யலாம் என்றும், அது தொடர்பான மேல்முறையீட்டை பதிவுத் துறை தலைவர் விசாரிக்கலாம் என்றும் அதிகாரம் வழங்கப்பட்டு பிறப்பிக்கப்பட்ட சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடுக்கப்பட்டது.

மாவட்ட பதிவாளர்: பல கட்ட விசாரணைக்கு பின் கடந்த 02.08.2024 அன்று சென்னை உயர்நீதிமன்றம் மேற்கண்ட சட்டப் பிரிவுகளில் மாவட்ட பதிவாளரே ரத்து செய்யும் வகையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமானது எனவும், எனவே அதை ரத்து செய்கிறோம் எனவும், மேலும் மேற்கண்ட சட்டப்பிரிவின் கீழ் மாவட்டப் பதிவாளர்கள் பிறப்பித்த உத்தரவுகளும் ரத்து செய்யப்படுகின்றன எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



இந்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளின் உத்தரவு சம்பந்தமாக பதிவுத்துறை தரப்பில் எந்த வித முடிவும் இதுவரை எடுக்கவில்லை என தெரிய வருகிறது. ஆகவே ஏற்கனவே மாவட்ட பதிவாளர்களால் மேற்கண்ட சட்டப் பிரிவுகளின் கீழ் ரத்து செய்யப்பட்டு வில்லங்க சான்றிதழில் குறிப்பிட்டுள்ள வில்லங்க விவரங்களை நீக்க வேண்டும்.

சுற்றறிக்கை: மேலும், அந்த உத்தரவின் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டுள்ள வருவாய் பதிவேடுகளை மீண்டும் முந்தைய உரிமையாளர் பெயரில் மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இது தொடர்பாக தாங்கள் சரியான வழிகாட்டி நெறிமுறைகளை, சுற்றறிக்கையாக வெளியிட வேண்டும்" என்று பதிவுத்துறை தலைவருக்கு பெயிரா தலைவர் டாக்டர் ஹென்றி மேற்கண்ட சட்டத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் நலன் கருதி, வேண்டுகோள் விடுத்து கடிதம் எழுதியுள்ளார்.



திருப்பூர் வடக்கு திமுக மகளிர் அணியினர் மாணவர்களுக்கு சுதந்திர தின பரிசு பொருட்கள் வழங்கினர். திருப்பூர் வடக்கு மாவட்டம் மாநகரம் 14 வது வார்டுக்கு உட்பட்ட கவிதாலாட்சி நகர் பள்ளியில் பயிலும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு வரும் ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தில் பரிசு பொருட்களை வழங்குவதற்காக திருப்பூர் வடக்கு மாநகர மகளிர் அணி அமைப்பாளர் என்.கௌரி வேலம்பாளையம் பகுதி திமுக மகளிர் அணி துணை அமைப்பாளர் சாந்தி மற்றும் மகளிர் அணியினர் ஆசிரியர்களிடம் பரிசு பொருட்களை வழங்கினர்.

# ரூ.525 கோடி மாயம்: தேவநாதன் கைது பின்னணி?

சென்னை, ஆக. 15

இந்திய மக்கள் கல்வி முன்னேற்ற கழகம் என்ற கட்சி நடத்தி வருபவர் தேவநாதன். இவர் வின் டிவிஉரிமையாளர்ஆவார். கிட்டத்தட்ட 150 ஆண்டுகள் பாரபரியம் மிக்க மயிலாப்பூர் இந்து சாசுவத நிதி லிமிடெட் (Mylapore Hindu Permanent Fund Nidhi Limited) நிறுவனத்தின் மீது கிட்டத்தட்ட 140 பேர் தற்போது புகார் அளித்துள்ளார்கள். இதில் 50 கோடி ரூபாய் வரை மோசடி செய்துள்ளார். ஆனால் 500 கோடி ரூபாய்க்கு மேல் அந்த நிதி நிறுவனத்தில் முதலீடு செய்த பணம் மாயம் ஆகியுள்ளதாக பகீர் தகவல் வெளியாகியுள்ளது.



சென்னை மயிலாப்பூரில் உள்ள தேற்கு மாடவிதியில் 1872ம் ஆண்டு திமயிலாப்பூர் இந்து சாசுவத நிதி லிமிடெட் என்ற பெயரில்நிதிநிறுவனம்தொடங்கப்பட்டது. இந்த நிறுவனம் 150 ஆண்டுகள் பழமையானது. 5 ஆண்டுகளுக்கு மேலாக நிறுவாக இயக்குனராகவும், உரிமையாளரகவும் இருந்தவர்தான் தேவநாதன்.

இந்நிறுவனத்திற்கு சென்னையில் மட்டும் 5 கிளைகள் உள்ளன. தற்போது 5000க்கும் மேற்பட்டோர் நிரந்தர வைப்பு தொகையாகயும் இதில் உறுப்பினராகவும் உள்ளனர்.

இந்த நிதி நிறுவனத்தில் முதலீடு செய்யும் பணத்திற்கு 10% முதல் 11% வரை வட்டி உறுதி என கவர்ச்சிகரமான விளம்பரத்தை அளித்து அதை நம்பி தமிழக முழுவதுமே பல்லாயிர கணக்கானோர் நிறந்தர வைப்பு தொகையாக ரூ. 525 கோடிக்கு மேல் முதலீட்டாளர்கள் முதலீடு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிறுவனத்தில் குறைந்தபட்ச வைப்பு நிதியாக 1 லட்சம் எனவும் அதிக பட்சமாக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் நிரந்தர வைப்பு தொகையாக செலுத்தலாம். முக்கியமாக செலுத்தும் பணத்திற்கு 10 முதல் 11% வட்டி அளிக்கப்படும் என்றும் அதை நம்பி தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட 1 லட்சம் பேர் 10 லட்சம் வரையிலும், 50 லட்சம் வரையிலும், 2 கோடி வரையிலுமே ஏராளமானோர் முதலீடு செய்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த ஆண்டு பணத்தை முதலீடு செய்தவர்களுக்கு முதிர்வு தொகை மற்றும் வட்டி தொகை முறையாக வழங்கப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் தினமும் மயிலாப்பூர் பகுதியில் உள்ள இந்த நிதி நிறுவனத்தில் சென்று பணத்தை கேட்டுவந்துள்ளனர். ஆனால் அதற்கு அவர்கள் முறையாக பதில் அளிக்கவில்லை .

அதனால் கடந்த ஜூன் மாதம் 6ம்தேதி முதலீட்டாளர்கள் இந்நிதி நிறுவனத்தில் முற்றுகையிட்டு சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். அதன்பிறகு போலீசார்பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் அறிவுரை படி பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகத்திற்கு புகார் அளிக்க சென்றுள்ளனர். 140க்கும் மேற்பட்டோர் புகார்களை அளித்துள்ளனர். இந்த புகார் அளிக்கப்பட்ட பிறகுதான் வழக்கு பதிவு செய்து விசாரணையும் தொடங்கியது.

இந்த விசாரணையின் 140 பேர் புகார் அளித்தில் அவர்களிடம் இருந்து ரூ. 50 கோடிக்கு அதிகமாக மோசடி செய்தது கண்டுபிடிக்கப்பட்டது என விசாரணையிலும் தெறிய வந்துள்ளது.

இந்த விசாரணைக்கு பிறகுதான் வின் டிவி தேவநாதனை திருச்சியில் வைத்து பொருளாதார குற்றப்பிரிவு அதிகாரிகள் கைது செய்து அவரிடம் அங்கேயே விசாரணையும் நடத்தியுள்ளனர். இந்த விசாரணையில்தான் 140 பேர் 50 கோடிக்கும் மேலாக முதலீடு செய்துள்ளார்கள் என்று தெறியவந்தது.

இந்த முதலீடு செய்த பணத்தை எங்கு எவ்வாறு மறைத்து வைத்துள்ளார் இல்லை வேறு யாரிடமும் முதலீடு செய்துள்ளாரா? என்று கோணத்தில் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# பஸ் கட்டண உயர்வு: ஏழை, நடுத்தர மக்கள் மீது அரசுக்கு இரக்கமே இல்லையா? அன்புமணி ராமதாஸ்

சென்னை, ஆக. 15

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



தமிழ்நாட்டில் டீசல் விலை உயர்வு, தொழிலாளர்களின் ஊதிய உயர்வு ஆகியவற்றுக்கு இணையாக பேருந்துக் கட்டணங்களைஉயர்த்துவது குறித்து முடிவெடுக்கதனி ஆணையம்அமைக்கதமிழக அரசு முடிவு செய்திருப்பதாகவும், ஆணையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் செய்தி வெளியாகி உள்ளது. இந்த செய்தி உண்மையாக இருந்தால் தமிழக அரசின் முடிவு கடுமையாக கண்டிக்கத்தக்கது. மின்சார வாரியம் சீரழிந்ததற்கு தவறான, ஊழல் நிறைந்த நிர்வாகம் தான் காரணம் என்பது எந்த அளவுக்கு உண்மையோ, அதே அளவுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சீரழிந்ததற்கும் தவறான, ஊழல் மலிந்த நிர்வாகம் தான் காரணம் என்பதும்உண்மைஆகும்.

போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகத்தில் நடைபெறும் ஊழல்களையும், முறைகேடுகளையும் களையாமல் பேருந்து கட்டணத்தை மட்டும் உயர்த்துவதால் எந்த பயனும் ஏற்படாது. ஏழை, எளிய மக்கள் மீது தமிழக அரசுக்கு சிறிதும் இரக்கமே இல்லை என்பதைத் தான் இந்த நடவடிக்கை காட்டுகிறது. எனவே, பேருந்துக் கட்டணங்களை உயர்த்துவது குறித்து முடிவெடுக்க தனி ஆணையம்அமைப்பதையும், அதன் வாயிலாக கட்டணங்களை உயர்த்துவதையும் தமிழக அரசு கைவிட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மோசடி புகாரில் வின் டிவி தேவநாதன் கைது



மயிலாடுதுறை, ஆக. 15

வின் டிவி உரிமையாளர் தேவநாதன் மயிலாப்பூர் இந்து சாசுவத நிதி லிமிடெட் நிறுவனத்தின்தலைவராக இருந்தபோது நிதி நிறுவன மோசடி செய்ததாக புகார் எழுந்தது. 140 க்கும் மேற்பட்டோர் புகார் கொடுத்ததன் அடிப்படையில் போலீசார் கைது செய்துள்ளனர். இந்த நிறுவனத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நிரந்தர வைப்பு நிதி வைத்திருந்ததாகவும், பலர் உறுப்பினராகவும் இருந்ததாக கூறப்படுகிறது. ரூ. 50 கோடி வரை மோசடி என எழுந்த புகாரில் வின் டிவி தேவநாதனை சென்னை பொருளாதாரகுற்றப்பிரிவு போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டுள்ளார். சமீபத்தில் முடிவடைந்த மக்களவை தேர்தல் பாஜக கூட்டணியில் சிவகங்கை தொகுதியில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவி னார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் பண மோசடி வழக்கு: ஜாபர் சாதிக் சகோதரர் முகமது சலீம் கைது

சென்னை, ஆக. 15

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட திமுக முன்னாள்நிர்வாகி ஜாபர்சாதிக்கின் சகோதரர் முகமது சலீமை அமலாக்கத்துறை கைது செய்துள்ளது.



போதைப்பொருள் கடத்தல் வழக்கில் டெல்லி மத்திய போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு போலீசார் திமுக முன்னாள் நிர்வாகியும், திரைப்பட தயாரிப்பாளருமான ஜாபர் சாதிக்கை கடந்த மார்ச் மாதம் கைது செய்து டெல்லி திகார் சிறையில் அடைத்தனர்.

போதைப்பொருள் கடத்தல் ஆயிரக்கணக்கான கோடியில் சர்வதேச அளவில் நடைபெற்றது கண்டுபிடிக்கப்பட்டதால், சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்டத்தின்கீழ் அமலாக்கத்துறை ஜாபர் சாதிக்கிற்கு எதிராக வழக்குப்பதிவு செய்து கடந்த ஜூன் மாதம் அவரை கைது செய்தது. அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

இந்த வழக்கு தொடர்பாக ஜாபர் சாதிக்கின் சகோதரர் முகமது சலீமை தற்போது பணமோசடி வழக்கில் அமலாக்கத்துறை கைது செய்துள்ளனர்.

நேற்று மாலை முகமது சலீம் கைது செய்யப்பட்டார்எனஅமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டநிலையில் அமலாக்கத்துறை அவரிடம் விசாரணை நடத்த 15 நாட்கள் அனுமதி வழங்கக்கோரி மனு தாக்கல் செய்தது. ஆனால் முதன்மை செசன்ஸ் நீதிபதி அவரை ஆகஸ்ட் 27 ந்தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார்.

அமலாக்கத்துறையின் மனு தொடர்பாக நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை நாளைக்கு ஒத்தி வைத்துள்ளார்.

# அரசு பஸ்கள் பஸ் நிறுத்தத்தில் நிற்காமல் செல்வதாக புகார் மாணவர்கள் சாலை மறியல்

அருப்புக்கோட்டை, ஆக. 15

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை செட்டிக்குறிச்சியில் அரசு கலைக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. இங்கு அருப்புக்கோட்டை மற்றும் சுற்றுவட்டாரகிராமங்களை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். கல்லூரிக்கு வருபவர்கள் பெரும்பாலனோர் அரசு பஸ்களையே நம்பி உள்ளனர். இதனால் காலை மற்றும் மாலை நேரங்களில் பஸ்களில் கூட்டம் அதிகமாக இருக்கும். அதில் மாணவ, மாணவிகள் பயணித்து கல்லூரி, வீடுகளுக்கு செல்வது சிரமமாக உள்ளது.



இருப்பினும் பல்வேறு இன்னல்களை தாண்டி மாணவ, மாணவிகள் கல்வி பயில கல்லூரிக்கு வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் கல்லூரி பஸ் நிறுத்தத்தில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக அரசு பஸ்கள் நிற்காமல் செல்வதாக கூறப்படுகிறது. இதனால் மாணவர்கள் பஸ்களை துரத்தி சென்று ஏறும் நிலையும், மாணவிகள் அதிககட்டணம்கொடுத்து தனியார் பஸ்களில் செல்லும் நிலையும் ஏற்பட்டது.

கல்லூரி பஸ் நிலையத்தில் அரசு பஸ்கள் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி மாணவ, மாணவிகள் பலமுறை கோரிக்கை வைத்தனர். ஆனால் அதற்கு அதிகாரிகள்செவிசாய்க்கவில்லை. இதனால் தொடர்ந்து அரசு கல்லூரி பஸ் நிறுத்தத்தில் பஸ்கள் நின்றாமல் சென்றது.

இதனை கண்டித்தும், பஸ்கள் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இன்று காலை கல்லூரிக்கு வந்த 400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் வகுப்புகளை புறக்கணித்து கல்லூரி எதிரே உள்ள மதுரைதூத்துக்குடி நான்கு வழிச்சாலையில் அமர்ந்து திடீரென சாலைமறியலில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள்கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. தகவலறிந்த டி.எஸ்.பி. காயத்ரி மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்குவந்து மாணவ, மாணவிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது அரசு பஸ்கள் நின்று செல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. இதையடுத்து மாணவ, மாணவிகள் சாலை மறியலை கைவிட்டு கல்லூரிக்கு சென்றனர். திடீர் சாலைமறியலால் மதுரை தூத்துக்குடி நான்கு வழிச் சாலையில் 1 மணி நேரத்திற்கும் மேலாக கடும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# கூட்டுறவு வங்கி தீ விபத்தில் மேலாளர் பலி: பெட்ரோல், தீப்பெட்டி இருந்ததால் தற்கொலையா? என விசாரணை

தூத்துக்குடி, ஆக. 15

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயல்பட்டு வருகிறது. இங்கு ஸ்ரீவைகுண்டம் அருகில் உள்ள புதுக்குடி சேர்ந்த பாலகிருஷ்ணன் மகன் ஸ்ரீதரன் (வயது 52) இந்த வங்கியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறார். இவருக்கு மனைவி, 2 மகள்கள் உள்ளனர்.



இவருக்கு உதவியாகதற்கால பணியாளராக பெண் ஒருவர் வேலை செய்து வருகிறார். இந்த வங்கியுடன் இசேவை மையமும் செயல்பட்டு வருகிறது. இந்த இசேவை மையத்தில் ஒரு பெண் வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில் இன்று மதியம் இசேவை மையத்தில் உள்ள பெண், ஸ்ரீதரனின் உதவியாளரும் மதியம் உணவுக்கு வெளியே சென்று உள்ளனர். ஸ்ரீதரன் மட்டும் வங்கியில் தனியாக இருந்துயுள்ளார்.

அந்நேரத்தில் திடீரென வங்கியின் உள் வெடி சத்தம் போல் பயங்கர சத்தம் கேட்டது. அத்துடன் வங்கி தீப்பிடித்து எரிந்தது. மளமளவெனதீ பரவி வங்கி முழுவதும் தீ பரவியது. அக்கம்பக்கத்தினர் வருவதற்குள் தீ முழுமையாக பரவி புகை மூட்டமாக மாறியது. அருகில் உள்ளவர்கள் கண்ணாடி கதவுகளை உடைத்து உள்ளே சென்றனர்.

உள்ளே சென்றவர்கள் ஸ்ரீதரனை மீட்க முயன்றனர். அதற்குள் மூச்சுதிணறல் ஏற்பட்டு ஸ்ரீதரன் உயிரிழந்துள்ளார். முதற்கட்ட விசாரணையில் கம்ப்யூட்டர் பேட்டரி வெடித்து வங்கியில் தீப்பிடித்ததாக கூறப்பட்டது.

பின்னர் போலீசார் விசாரணையின்போது வங்கியில் பெட்ரோல் மற்றும் தீப்பெட்டி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஸ்ரீதரன் தற்கொலை செய்து கொண்டாரா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இலங்கையில் இருந்து கடத்தி வரப்பட்ட ரூ. 4.56 கோடி மதிப்பிலான தங்கம் பறிமுதல்

இலங்கை, ஆக. 15

இலங்கையில் இருந்து கடல் வழியாக ராமநாதபுரம் மாவட்டத்திற்கு கடத்தி வரப்பட்ட சுமார் 6.60 கிலோ தங்கத்தை சுங்கத்துறையினர் பறிமுதல் செய்ததுடன், கடத்தி வந்தவர்களை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கீழக்கரையை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது. இதனையடுத்து 2 பேரிடமும் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.



இலங்கையில் இருந்து கடத்தல் தங்கம் கடத்தி வருவதாக வருவாய் புலனாய்வு துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இந்த தகவலின்படி திருப்பாச்சேத்தி டோல்கேட் பகுதியில் சோதனை நடத்தினர்.

இந்த தீவிர சோதனையில் சந்தேக விதமாக வந்த காரை நிறுத்தியதில் இலங்கையில் இருந்து கடத்தி வரப்பட்ட 6 கிலோ 600 கிராம் மதிப்பிலான கடத்தல் தங்கம் இருப்பதை கண்டறிந்தனர்.

அதன் மதிப்பு ரூ.4.56 கோடி ரூபாய். உடனே தங்கத்தை பறிமுதல் செய்தனர்.

# துப்பாக்கியால் சுட்டு ரவுடியை பிடித்த எஸ்.ஐ. கலைச்செல்விக்கு பாராட்டு

சென்னை, ஆக. 15

சென்னையில் கடந்த மாதம் 5ந்தேதி பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் வெட்டி படுகொலை செய்யப்பட்டசம்பவத்துக்கு பின்னர் ரவுடிகள் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.



தலைமறைவாக உள்ள ரவுடிகளை பிடிக்க போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். சென்னை மாநகரில் பணியாற்றி வரும் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசாரும் ரவுடிகளை பிடிக்க இரவு பகலாக அதிரடி வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில் சென்னைசெனாய்நகரை சேர்ந்த ரவுடி ரோகித் ராஜையும் போலீசார் தேடி வந்தனர்.

ரவுடி ரோகித்ராஜ் கீழ்ப்பாக்கம் கல்லறை தோட்டத்தில் பதுங்கி இருப்பதாக தனிப்படை போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து சப்இன்ஸ்பெக்டர் கலைச் செல்வி தலைமையிலான போலீசார் துப்பாக்கியுடன் ரவுடி ரோகித் ராஜை பிடிக்க களம் இறங்கினர். சப் இன்ஸ்பெக்டர் கலைச் செல்வியுடன், போலீஸ் ஏட்டுகள் பிரதீப், சரவணகுமார் ஆகிய இருவரும் உடன் சென்றனர்.

கீழ்ப்பாக்கம் கல்லறை தோட்டத்துக்குள் இன்று அதிகாலை நுழைந்த போலீசார் ரவுடி ரோகித் ராஜ் இருக்கும் இடத்தை கண்டுபிடித்து சுற்றி வளைத்தனர்.

போலீசார் எச்சரித்தும் தப்பி ஓடுவதிலேயே குறியாக இருந்த ரவுடி ரோகித்ராஜ் போலீசாரை தாக்கியதில் ஏட்டுகள் பிரதீப், சரவணகுமார் இருவருக்கும் கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது.

போலீசாரை தாக்கிவிட்டு தப்ப முயன்ற ரவுடி ரோகித் ராஜை எஸ்.ஐ. கலைச்செல்வி காலில் சுட்டு பிடித்தார். இதில் வலது காலில் குண்டு பாய்ந்து ரோகித்ராஜ் நடு ரோட்டில் சாய்ந்தான்.

இதையடுத்து எஸ்.ஐ. கலைச் செல்வி உயர் போலீஸ் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார்.

இந்நிலையில் ரவுடியை துப்பாக்கியால் சுட்டுப்பிடித்த டி.பி. சத்திரம் எஸ்.ஐ. கலைச் செல்வியை நேரில் அழைத்து, சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் பாராட்டு தெரிவித்தார்.

# கோயம்பேடு மார்க்கெட்டில் பூங்கா அமைக்கும் பணி தொடக்கம்



சென்னை, ஆக. 15
கோயம்பேடு மார்க்கெட் வளாகத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன. இதில், காய்கறி, பழங்கள், பூக்கள் மற்றும்மளிகைப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இங்குள்ள கடைகளில் வியாபாரிகள் மற்றும் தொழிலாளிகள் என 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், தொழிலாளர்கள் மற்றும் சுற்றுவட்டாரப்பகுதிகளில் உள்ளவர்கள் பயனடையும் வகையில், ஏற்கனவே ரூ.86 லட்சம் மதிப்பில் நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனை அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், கோயம்பேடு மார்க்கெட் வளாகத்தை அழகுபடுத்தும் விதமாக பூ மார்க்கெட் வளாகத்தில் 7 ஏக்கரில் பிரமாண்டமான பூங்கா அமைக்க சென்னை பெருநகரவளர்ச்சி குழுமம் திட்டமிட்டு, தற்போது அதற்கான பணிகள் தொடங்கப்பட்டு உள்ளது.

இந்த பூங்காவில் நடைபயிற்சிக்கான பாதைகள், குழந்தைகள் விளையாடுவதற்கான இடம், மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள், செடிகள், மரங்கள், இருக்கைகள், செயற்கை நீரூற்றுகள் ஆகியவையும் அமைக்கப்பட உள்ளது.

மருத்துவமனைப் பணிகள் விரைவில் நிறைவுபெற்று செயல்பாட்டுக்கு வர உள்ள நிலையில், பூங்காவும் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என கோயம்பேடு மார்க்கெட் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# முல்லைப்பெரியாறு அணையில் தமிழக உரிமையை காக்க வேண்டும்: ராமதாஸ்



சென்னை, ஆக. 15
பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வயநாடு நிலச்சரிவால் முல்லைப் பெரியாறு அணைக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று கேரள நீர்வளத்துறை அமைச்சர் ரோசி அகஸ்டின் கூறினாலும் கூட, முல்லைப் பெரியாறு விவகாரத்தில் தமிழ்நாட்டுக்கு எதிராக செய்யப்படும் பரப்புரைகளுக்கு கேரள அரசின் மறைமுக ஆதரவு தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

முல்லைப்பெரியாறு அணை நமது சொத்து; அதன் நீரை பயன்படுத்திக் கொள்வதும், அணையை வலுப்படுத்தி அதன் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதும் நமது உரிமை. இதில் தமிழ்நாடு அரசு எத்தகைய சமரசத்தையும் செய்து கொள்ளக் கூடாது. அணையின் நீர் மட்டத்தை 120 அடியாக குறைப்பது, அணை அமைந்துள்ள நிலத்தின் குத்தகை ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்வது ஆகியவை தொடர்பான இரு வழக்குகளிலும் மூத்த வழக்கறிஞர்களை நியமித்து, முல்லைப்பெரியாறு பாசன உழவர்களின் நலனைக் காக்க தமிழக அரசு வாதிட வேண்டும்.

இன்னொருபுறம், முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை இப்போதுள்ள 142 அடியில் இருந்து 152 அடியாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரப்படுத்த வேண்டும். பேபி அணையை வலுப்படுத்துவதன் மூலமாகவே இதை சாத்தியமாக்க முடியும். ஆனால், அதற்குத் தடையாக உள்ள மரங்களை வெட்ட கேரள அரசு அனுமதி மறுக்கிறது. இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில்நிலுவையில்உள்ள வழக்கிலும் சாதகமான தீர்ப்பைப் பெற்று அணையை வலுப்படுத்தும் பணிகளை தமிழக அரசு தீவிரப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# ராஜபாளையம் அருகே தலை துண்டித்து வாலிபர் கொலை

ராஜபாளையம், ஆக. 15
விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே உள்ள சுந்தரராஜபுரத்தை சேர்ந்தவர் பூவையா (வயது45). இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளனர்.

பூவையா மாடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறார். கடந்த 2 நாட்களுக்கு முன்பு வழக்கம் போல் மனைவியிடம் கூறிவிட்டு மாடுகளை மேய்ப்பதற்காக ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலை அடிவார பகுதிக்கு சென்றுள்ளார்.

இதற்கிடையே 2 நாட்களாகியும் பூவையா வீட்டிற்குதிரும்பிவரவில்லை. இதனால் பதற்றமடைந்த அவரது மனைவி உறவினர்களை அழைத்து கொண்டு பல்வேறு இடங்களில் தேடினார். ஆனால் பூவையாகுறித்து எந்த விதகவலும் கிடைக்கவில்லை.

இதையடுத்து அவர் சேத்தூர் ஊரக காவல் நிலையத்தில் புகார் செய்தார். அதன் பேரில் போலீசார் பூவையாவை தேடி வந்தனர். இந்த நிலையில் ராஜபாளையத்தில் இருந்து மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள அய்யனார் கோவிலுக்கு செல்லும் வழியில் முட்புதர் சாலையில் உள்ள ஒரு பாலத்தின் அடியில் வாலிபர் ஒருவரின் தலை துண்டிக்கப்பட்டு கிடப்பதாக தகவல் கிடைத்தது.

உடனடியாக ராஜபாளையம் வடக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் பவுல் ஏசுதாஸ் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பார்த்தனர். அப்போது அங்கு வாலிபரின் தலை மட்டும் கிடந்தது. மோப்ப நாய் உதவியுடன் அந்த பகுதி முழுவதும் போலீசார் தேடிய போது மற்றொரு இடத்தில் உடல் கிடந்ததை கண்டுபிடித்தனர்.

தலை மற்றும் உடலை கைப்பற்றிய போலீசார் அதிரடி விசாரணையில் இறங்கினர். முதல் கட்ட விசாரணையில் கொலை செய்யப்பட்டு கிடந்தது பூவையா என்றும், அவர் தான் அழைத்து சென்ற மாடுகளை அப்பகுதியில் உள்ள ஒரு விவசாய நிலத்தில் மேய விட்டதாகவும், அதில் ஏற்பட்ட தகராறில் நில உரிமையாளரின் மகன்கள் 2 பேர் சேர்ந்து பூவையாவை தலையை துண்டித்து கொடூரமாக கொலை செய்தது தெரிய வந்தது. அதன்பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார் கொலையுண்ட பூவையாவின் உடலை பிரேத பரிசோதனைக்காக ராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் நடந்த இடத்தில் தடயவியல் நிபுணர்கள் மற்றும் தனிப்படை போலீசார் விசாரணை நடத்தி கொலையாளிகளை தீவிரமாக தேடி வருகிறார்கள். இச்சம்பவம் தொடர்பாக காவலாளி ஒருவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் ராஜபாளையம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# தீபாவளி விமான டிக்கெட் கட்டணம் அதிகரிப்பு




ஆலந்தூர், ஆக. 15
தீபாவளி பண்டிகை அக்டோபர் மாதம் 31ந்தேதி விமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. இதற்காக சென்னை உள்ளிட்ட பெரு நகரங்களில்வசிப்பவர்கள்சொந்த ஊர்களுக்கு சென்று தீபாவளியை கொண்டாட இப்போதே பயணதிட்டத்தை வகுத்து வருகிறார்கள்.

தீபாவளிக்கு விமான பயணம் மேற்கொள்வோர் தங்களுடைய விமானடிக்கெட்டை முன்பதிவு செய்து வருகின்றனர். 90 நாட்களுக்கு முன்பே விமான டிக்கெட்டுகள்முன்பதிவுதொடங்கி உள்ளதால் தீபாவளி பண்டிகையையொட்டி விமான கட்டணங்கள் ரூ.20 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரை உயர்ந்து உள்ளன.

இதில் அக்டோபர் 30ந்தேதியில் இருந்து நவம்பர் 5ந்தேதி வரையிலான டிக்கெட் முன்பதிவு செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால்விமானடிக்கெட் எண்ணிக்கையும் விலையும் அதிரடியாக உயர்த்துள்ளன.

பெங்களூரில் இருந்து பாட்னா செல்ல ரூ.30 ஆயிரம் வரை கட்டணம் எகிறி உள்ளது. இதே போல் பெங்களூரில் இருந்து வாரணாசிக்கு ரூ.23 ஆயிரம், மும்பை லக்னோ ரூ.19 ஆயிரத்து 292, பூனேலக்னோ ரூ.19ஆயிரத்து226, டெல்லிகவுகாத்தி ரூ.18 ஆயிரத்து 573 ஆக கட்டணங்கள் உள்ளன.

இதேபோல் மும்பையில் இருந்து சென்னைக்கு ரூ.5083 ரூபாயும், டெல்லியில் இருந்து சென்னைக்கு ரூ.7,618 ஆகவும் கட்டணம் உயர்ந்துள்ளது.

கடைசி நேரங்களில் ரெயில் மற்றும் பேருந்து டிக்கெட் கிடைக்காதவர்கள் சொந்த ஊரு செல்வதற்கு விமான பயணத்தை மேற்கொள்ள திட்டமிடுவர்.

இதனால் தீபாவளி பண்டிகை நெருங்கும் நாட்களில் விமான டிக்கெட் கட்டணம் பலமடங்கு அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

# சுதந்திர தினத்தையொட்டி திருப்பூர் ரெயில் நிலையத்தில் அதிரடி சோதனை



திருப்பூர், ஆக. 15
சுதந்திர தின விழா நாடு முழுவதும் நாளை மறு நாள் (15ந்தேதி) கொண்டாடப்படுகிறது. திருப்பூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சுதந்திர தின விழா திருப்பூர் சிக்கண்ணா கல்லூரி மைதானத்தில் கொண்டாடப்படுகிறது. கலெக்டர் கிறிஸ்துராஜ் தேசிய கொடி ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார். தொடர்ந்து தியாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து கவுரவிக்கிறார்.

அதன் பின்னர் மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய போலீசார் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு சான்றிதழ் வழங்குகிறார். தொடர்ந்து மாணவ மாணவிகளின்கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

சுதந்திர தினத்தையொட்டி திருப்பூர் ரெயில் நிலையத்தில் இன்று காலை முதல் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. ரெயில்வே போலீசார், வெடிகுண்டு கண்டறியும் கருவி உதவியுடன் பயணிகளின் உடைமைகளை சோதனை செய்து அதன்பிறகே ரெயில் நிலையத்துக்குள் அனுமதிக்கிறார்கள். அதுபோல் பார்சல் பண்டல்களையும் போலீசார் தீவிர சோதனை செய்த பிறகே அனுமதிக்கிறார்கள். 24 மணி நேரமும் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுடன் ரெயில்வே பாதுகாப்புபடை போலீசாரும் இணைந்து பாதுகாப்பு பணியை மேற்கொண்டு வருகிறார்கள்.

திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷனர் லட்சுமி உத்தரவின் பேரில் மாநகர் முழுவதும் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது. அரசு அலுவலகங்கள், வழிபாட்டு தலங்கள், மாநகரின் முக்கிய சாலை சந்திப்புகள், பஸ் நிலையங்கள், ரெயில் நிலையம், தலைவர்களின் சிலைகள் உள்ள பகுதிகளில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். விடுதிகள், லாட்ஜ்களிலும் போலீசார் சோதனை மேற்கொள்கிறார்கள். அதுபோல் ரெயில் தண்டவாளபாதை ரோந்துப்பணியையும் போலீசார் கண்காணிக்க உள்ளனர்.

சுதந்திர தின விழா நடைபெறும் சிக்கண்ணா அரசு கல்லூரிமைதானம், மாநகராட்சி அலுவலகம், கலெக்டர் அலுவலகம் ஆகிய பகுதிகளில் போலீசார் பாதுகாப்பு பணியை மேற்கொள்கிறார்கள். போலீசாருடன் ஊர்க்காவல் படையினரும் இணைந்து பணியாற்றுகிறார்கள். மாநகரம் முழுவதும் 600க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதுபோல் திருப்பூர் மாவட்டம் முழுவதும் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# பரந்தூர் விமான நிலைய பணிக்கு அடுத்த ஆண்டு `டெண்டர்'




காஞ்சிபுரம், ஆக. 15
சென்னையின் 2வது விமான நிலையம் காஞ்சிபுரம் மாவட்டம்பரந்தூரில்அமைய உள்ளது. சுமார் 32 ஆயிரத்து 704 கோடி செலவில் 2 ஆயிரத்து 171 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைகிறது.

இதில் 1386 ஹெக்டேர் விவசாய நிலம், 577 ஹெக்டேர் நீர் நிலைகள் மற்றும் 173 ஹெக்டேர் அரசு மற்றும் புறம்போக்கு நிலங்கள் ஆகும்.

இதற்கான முறையான அனுமதி கிடைத்ததும் விமான நிலைய பணிக்கான டெண்டர் அடுத்த ஆண்டு (2025) தொடக்கத்தில் விடப்படும் என்று தெரிகிறது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறும்போது, `விமான நிலையத்துக்கு தேவையான நிலங்களை கையகப்படுத்தும் பணி தொடங்கி நடந்து வருகிறது. இதற்கு பரந்தூர், ஏகனாபுரம் உள்ளிட்ட 13 கிராம மக்கள் தொடர்ந்து எதிர்ப்புகள் தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே பரந்தூர் புதிய விமான நிலையத்துக்கான தொழில்நுட்பதிட்டபொருளாதார அறிக்கைகள் தயாரித்து மாநில அரசிடம் வழங்கப்பட்டு உள்ளது. இந்த அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது.

விமான நிலைய பணிக்கு மத்திய அரசிடம் இருந்து கொள்கை ரீதியான ஒப்புதல் கிடைத்ததும் டெண்டர் வெளியிடப்படும். விரைவில் அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் மாதத்திற்குள் டெண்டர் விட திட்டமிட்டுள்ளோம் என்றார்.

இதற்குள் விமான நிலையத்துக்கு தேவையான நிலங்கள் அனைத்தையும் கையகப்படுத்தும் பணியை முழுமையாக முடிக்க அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர். இதற்கான பணிகள் வேகம் எடுத்து உள்ளன.

# துப்பாக்கியால் சுட்டு ரவுடியை பிடித்த பெண் சப்இன்ஸ்பெக்டர்



சென்னை, ஆக. 15
சென்னையில் கடந்த மாதம் 5ந்தேதி பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் வெட்டி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு பின்னர் ரவுடிகள் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தலைமறைவாக உள்ள ரவுடிகளை பிடிக்க போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். சென்னை மாநகரில் பணியாற்றி வரும் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசாரும் ரவுடிகளை பிடிக்க இரவு பகலாக அதிரடி வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்தவகையில் சென்னை செனாய் நகரை சேர்ந்த ரவுடி ரோகித் ராஜையும் போலீசார் தேடி வந்தனர்.

இந்த நிலையில் ரவுடி ரோகித்ராஜ் கீழ்ப்பாக்கம் கல்லறை தோட்டத்தில் பதுங்கி இருப்பதாக தனிப்படை போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து சப்இன்ஸ்பெக்டர் கலைச் செல்வி தலைமையிலான போலீசார் துப்பாக்கியுடன் ரவுடி ரோகித் ராஜை பிடிக்க களம் இறங்கினர். சப்இன்ஸ்பெக்டர் கலைச் செல்வியுடன், போலீஸ் ஏட்டுகள் பிரதீப், சரவண குமார் ஆகிய இருவரும் உடன் சென்றனர்.

கீழ்ப்பாக்கம் கல்லறை தோட்டத்துக்குள் இன்று அதிகாலை 4.30 மணிக்கு நுழைந்த போலீசார் ரவுடி ரோகித் ராஜ் இருக்கும் இடத்தை கண்டுபிடித்து சுற்றி வளைத்தனர்.

போலீசாரை பார்த்ததும் ரோகித்ராஜ்தப்பி ஓட முயற்சித்தான். இதனால் உஷாரான போலீசார் "டேய் தப்பி ஓட நினைக்காதே... போலீஸ் விசாரணைக்கு எங்களோடு வந்து விடு. இல்லையென்றால் நடப்பதே வேறு" என்று எச்சரித்துள்ளனர். ஆனால் ரோகித் ராஜோ, போலீசார் சொல்வதை கேட்காமல் தப்பிச் செல்வதிலேயே குறியாக இருந்தான். இதைத் தொடர்ந்து போலீஸ் ஏட்டுகள் சரவணகுமார், பிரதீப் இருவரும் ரவுடி ரோகித் ராஜை மடக்கி பிடிக்க முயன்றனர். அப்போது ரோகித் ராஜ் திடீரென தாக்குதலில் ஈடுபட்டான். மறைத்து வைத்திருந்த பெரிய கத்தியை எடுத்து சரமாரியாக வெட்டினான். இதில் ஏட்டுகள் பிரதீப், சரவணகுமார் இருவருக்கும் கையில் வெட்டுக் காயம் ஏற்பட்டது.

இதில் நரம்பு துண்டிக்கப்படும்அளவுக்கு கொடுங்காயம் ஏற்பட்ட போதிலும் ஏட்டுகள் இருவரும் ரவுடி ரோகித்ராஜை எப்படியாவது பிடித்து விட வேண்டும் என்பதில் குறியாக இருந்து மல்லுக்கட்டினார்கள்.

அப்போது அவர்களோடு கத்தியை வைத்துக் கொண்டே கட்டிப்புரண்டு சண்டை போட்ட ரோகித் ராஜ் போலீசின் பிடியில் இருந்து நழுவி தப்பி ஓடினான்.

இதைத் தொடர்ந்து சப் இன்ஸ்பெக்டர் கலைச் செல்வி தனதுதுப்பாக்கியை தூக்கிக் கொண்டு ரவுடி ரோகித்ராஜின் பின்னால் ஓடினார். "ஓடாதே... நில்..." என்று அவர் எச்சரித்தார். ஆனால் ரவுடி ரோகித் ராஜோ போலீசில் சிக்கி விடக் கூடாது. தப்பி ஓடி விட வேண்டும் என்கிற எண்ணத்தில் ஓட்டம் பிடித்தான். கல்லறை தோட்டத்துக்கு வெளியே உள்ள கல்லறை சாலையில் தலைதெறிக்க ஓடிய ரவுடி ரோகித்தை பிடிக்க சப் இன்ஸ்பெக்டர் கலைச் செல்வி அதிரடி நடவடிக்கையில் இறங்கினார்.

ரவுடி ரோகித் ராஜை சுட்டுப் பிடிக்க முடிவு செய்த அவர் ரோகித்தை நோக்கி குறி பார்த்து சுட்டார். இதில் வலது காலில் குண்டு பாய்ந்து ரோகித்ராஜ் நடு ரோட்டில் சாய்ந்தான். இந்த துப்பாக்கி சூடு சம்பவம் அதிகாலையில் நடந்ததால் ரோட்டில் ஆள் நடமாட்டம் இல்லை.

இதையடுத்து சப்இன்ஸ்பெக்டர் கலைச்செல்வி உயர் போலீஸ் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். டி.பி.சத்திரம் போலீசார் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று ரவுடி ரோகித் ராஜை மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ரோகித் ராஜ் ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். காலில் கட்டுபோடப்பட்டு ரோகித்ராஜுக்குதீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. காயம் அடைந்த ஏட்டுகள் பிரதீப், சரவண குமார் இருவரும் கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

ஆம்ஸ்ட்ராங் படுகொலை சம்பவத்துக்கு பிறகு கடந்த மாதம் ரவுடி திருவேங்கடம் போலீஸ் என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்டான்.

இந்த நிலையில் ரவுடி ரோகித் ராஜை போலீசார் துப்பாக்கியால் சுட்டு பிடித்துள்ளனர். ஏற்கனவே என்கவுண்டர் பீதியில் தவிக்கும் ரவுடிகள் துப்பாக்கி சூடு சம்பவத்தால் மேலும் கலக்கம் அடைந்து பீதியில் தவித்து வருகிறார்கள்


## பொது அறிவிப்பு

மாண்பமை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருப்பூர்
E.P எண்: 8/2024
ஓ.எஸ். எண் 418/2015
பால்ராஜ் சிங்கராஜ் நாச்சம்மாள் அசோக்குமார் ...மனுதாரர்கள் / தீர்ப்பாணை பெற்றவர்கள்
எதிர்

விஜயா (இறந்துவிட்டார்) 1
க/பெ முருகன், செம்மேடு தோட்டம் காங்கேயம் சாலை, திருப்பூர்-641604.
2. சகுந்தலா க/பெ சுப்பிரமணி, செம்மேடு தோட்டம் காங்கேயம் சாலை, திருப்பூர்-641604.
3. செல்வி, க/பெ பழனிச்சாமி, செம்மேடு தோட்டம் காங்கேயம் சாலை, திருப்பூர்-641604
4. வசுகி க/பெ ஜெயராமன், செம்மேடு தோட்டம் காங்கேயம் சாலை, திருப்பூர்-641604
5. கண்ணம்மாள், க/பெ குப்புசாமி, செம்மேடு தோட்டம் காங்கேயம் சாலை, திருப்பூர்-641604.
6. லட்சுமி க/பெ பாட்டன், செம்மேடு தோட்டம் காங்கேயம் சாலை, திருப்பூர்-641604.
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு
மேற்படி E.P No. 8/2024 என்ற வழக்கின் மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர்கள் ஆகிய பால்ராஜ் மற்றும் மூன்று நபர்கள் எதிர்மனுதாரர்கள் மீது மாண்பமை முதன்மை மாவட்டஉரிமையியல்நீதிமன்றம்திருப்பூர்நீதிமன்றத்தில் வழக்குதாக்கல்செய்துமேற்படிவழக்கில்எதிர்மனுதாரர்கள் ஆகிய நீங்கள் ஆஜராவதற்காக 25.07.2024 தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றையதினம் தாங்கள் நேரிலோ அல்லதுவழக்கறிஞர்மூலமாகவோமேற்படிநீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக தகுந்த உத்திரவு பிறப்பிக்கப்படும் என்பதனை இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. நீதிமன்ற உத்திரவுப்படி இந்த அறிவிப்பு வழங்கப்படுகின்றது.

எஸ்.சபரி கீதன் எம்.ஏ., பி.எல்.,
எண்.16, பூம்புகார்நகர் மேற்கு, பல்லடம் சாலை,
திருப்பூர்-641604
செல்-9842275525

## ராயன் திரைப்படத்தின் ஓடிடி அப்டேட் வெளியாகியது




தனுஷ் இயக்கி மற்றும் நடித்து சில வாரங்களுக்கு முன் வெளியாகியது ராயன் திரைப்படம். படம் வெளியானதில் இருந்து மக்களிடம் மிகப் பெரிய வரவேற்பை பெற்றது.

தனுஷுடன் துஷாரா விஜயன், காளிதாஸ் ஜெயராம், சந்தீப் கிஷன், எஸ்.ஜே சூர்யா, செல்வராகவன், பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்துள்ளனர். படத்தில் தனுஷுக்கு தங்கையாக நடித்து இருந்தார் துஷாரா விஜயன்.

இதுவரை தனுஷ் நடித்து வெளியான படங்களில் இப்படத்தின் வசூல் முதலிடத்தை பெற்றுள்ளது. திரைப்படம் வெளியாகி ஒரு வாரத்திலேயே 116 கோடி ரூபாய் வசூலித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திரைப்படம் இதுவரை உலகளவில் 150 கோடி ரூபாய் வசூலித்துள்ளது குறிப்பிடத்தக்கது. 2024 ஆம் ஆண்டு வெளியான தமிழ் சினிமாவில் மிகப்பெரிய வெற்றிப் பெற்ற படங்களில் முதல் இடத்தில் உள்ளது ராயன்.

படத்தில் இடம்பெற்றுள்ள வாட்டர் பாக்கெட் மற்றும் அடங்காத அசுரன் பாடல்கள் மிகப் பெரிய ஹிட்டாகி உள்ளது. திரைப்படத்தில் நடித்த துஷாரா விஜயனுக்கும் மிகப்பெரிய வரவேற்பை மக்கள் கொடுத்துள்ளார்கள்.

திரைப்படத்தை குறித்து ஓடிடி தகவல் வெளியாகியுள்ளது. படத்தின் ஓடிடி உரிமையை அமேசான் பிரைம் வாங்கியுள்ளது. திரைப்படம் ஆக்ஸ்ட் 30 தேதி ஓடிடியில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. திரைப்படம் சன் நெக்ஸ்ட் செயலிலயும் இருக்கும் என தெரிவித்துள்ளனர்.

## `அதிகாரத்துல இருக்கவன் அடிக்க தாண்டா செய்வான்' தோழர் சேகுவேரா படத்தின் டிரைலர்




தமிழ் சினிமாவின் வெர்சடைல் நடிகர்களில் ஒருவர் சத்யராஜ். எந்த கதாப்பாத்திரம் கொடுத்தாலும் அதுக்கேற்றார் போல திறமையான நடிப்பை வெளிப்படுத்தும் நபர். இவர் நடிப்பில் கடந்த மாதம் வெளியானது வெப்பன் திரைப்படம்.

வெப்பன் திரைப்படத்தின் ஒரு சூப்பர் ஹுயுமன் கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தார். திரைப்படம் மக்களிடையே கலவையான விமர்சனத்தை பெற்றது. அண்மையில் விஜய் ஆண்டனி நடிப்பில் வெளியான மழை பிடிக்காத மனிதன் திரைப்படத்திலும் ஒரு மாறுப்பட்ட கெட்டப்பில் நடித்து இருந்தார்.

சத்யராஜ் அடுத்து நடித்திருக்கும் திரைப்படம் தோழர் சேகுவேரா. இப்படத்தில் டிரைலர் சமீபத்தில் வெளியானது. திரைப்படம் முன்னதாக மார்ட் 1 ஆம் தேதி வெளியாகவுள்ளதாக இருந்தது ஆனால் ஏதோ ஒரு காரணத்தினால் அது தள்ளிப்போனது. திரைப்படம் தற்பொழுது வரும் செப்டம்பர் 20 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

அதிகார வர்கத்திற்கும் தொழிலாளி வர்கதுக்கும் இடையே நடக்கு போர் மற்றும் பாகுபாடுகளை பேசக் கூடிய திரைப்படமாக அமைந்துள்ளது. சத்யராஜுடன் இணைந்து ரஜேந்திரன், நாஞ்சில் சம்பத், கூல் சுரேஷ், அலெக்ஸ் மற்றும் பலர் நடித்துள்ளனர். சாம் அலன் படத்தின் ஒளிப்பதிவை மேற்கொண்டுள்ளார். படத்தின் இசையை பி.எஸ் அஷ்வின் இசையமைத்துள்ளார்.

## நிமிஷா சஜயன் அடுத்து நடிக்கும் தமிழ் படத்தை குறித்து அப்டேட்



சித்தார்த் நடிப்பில் வெளியான சித்தா படத்தில் நடித்து மக்களிடையே பிரபலமானவர் நடிகை நிமிஷா சஜயன்.

தொடர்ந்து தமிழ், மலையாள படங்களில் நடித்து வருகிறார். கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் வெளியான ஜிகர்தண்டா டபுள் எக்ஸ் படத்தில் நிறைமாத கர்ப்பிணியாக பழங்குடி பெண் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார் .


சமீபத்தில் நடந்து முடிந்த சைமா விருது வழங்கும் விழாவில் சித்தா படத்திற்காக சிறந்த நடிகை விருதை வென்றார். அடுத்தடுத்து வித்தியாசமான கதைக்கலங்களை தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார்.

இந்நிலையில் நிமிஷா சஜயன் தேசிய விருது வென்ற திரைக்கதை எழுத்தாளரான சஞ்சீவ் பழூர் இயக்கும் தமிழ் படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்திற்கு என்ன விலை என தலைப்பிட்டுள்ளனர். சஞ்சீவ் இயக்கும் முதல் திரைப்படம் இதுவே. இதற்குமுன் சஞ்சீவ் ஃபஹ்த் ஃபாசில் நடிப்பில் வெளிவந்து மாநில அரசு விருதை வென்ற திரைப்படமான தொண்டி முத்தாலும் திரிக்சாக்ஷியும் படத்திற்கு திரைக்கதை எழுதியவராவர்.

என்ன விலை திரைப்படம் தமிழில் உருவாகவுள்ளது. திரில்லர் திரைப்படமாக உருவாகவுள்ளது. நிமிஷா சஜயனுடன் கருணாஸ், ஒய்.ஜி மகேந்திரன், ரஜேந்திரன், விஜயலட்சுமி, மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இப்படத்தை கமலாலய பிலிம்ஸ் தயாரிக்க, சாம் சி.எஸ் இசையமைக்கவுள்ளார். படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு முடிவடந்த நிலையில். இரண்டாம் கட்ட படப்பிடிப்பு நடந்து வருகிறது. விரைவில் திரைப்படம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 'டாம் அண்ட் ஜெரி' கார்ட்டூன் காமெடி அல்ல வன்முறை அக்சய் குமார் சொல்லும் ரகசியம்



பாலிவுட் சினிமாவின் முன்னணி நடிகர் அக்சய் குமார், 90 ஸ் கிட்ஸ்களின் பிரியத்துக்குரிய டாம் அண்ட் ஜெரி கார்ட்டூனில் உள்ளது காமெடி அல்ல வன்முறை என்று தெரிவித்துள்ளார்.

கேல் கேல் மெய்ன் என்ற புதிய படத்தின் அக்சய் குமார் நடித்து முடித்துள்ளார். இதில் இவருக்கு ஜோடியாக ஆகா கல்யாணம் புகழ் வாணி கபூர், உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சியில் பேசிய சக நடிகர் பரீத் கான், தனக்கு டாம் அண்ட் ஜெரி மிகவும் பிடிக்கும் என்று பேசிக்கொண்டிருந்தார் .

அப்போது இடைமறித்த அக்சய், டாம் அண்ட் ஜெரி என்பது காமெடி அல்ல அது வன்முறை, இன்று உங்களுக்கு ஒரு ரகசியத்தைச் சொல்கிறேன். நான் நடித்த படங்களில் நிறைய ஆக்ஷன் காட்சிகள் டாம் அண்ட் ஜெரியில் இருந்து இன்ஸ்பயர் ஆகி எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். ராஜமவுலி இயக்கிய பாகுபலி 2 , ஆர்.ஆர்.ஆர் உள்ளிட்ட படங்களில் உள்ள பிரபல காட்சிகள் டாம் அண்ட் ஜெரியை ஒத்திருப்பதாக சமீப நாட்களாக இணையத்தில் விவாதம் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.




## `டபுள் ஐஸ்மார்ட்' படத்திற்கு A சான்றிதழ் கொடுத்த தணிக்கை குழு

தெலுங்கில் பிரபல நடிகராக வலம் வருபவர் ராம் பொதினேனி. தெலுங்கு சினிமாவில் பிசியான நடிகராக வலம் வரும் இவர் சமீபத்தில் வாரியர், ஸ்கந்தா போன்ற படங்களில் நடித்திருந்தார். அதைத் தொடர்ந்து டபுள் ஐஸ்மார்ட் எனும் படத்தில் நடித்துள்ளார். இந்த படமானது 2019ல் வெளியான ஐஸ்மார்ட் சங்கர் எனும் படத்தின் இரண்டாம் பாகமாக உருவாகியுள்ளது.

இந்த படத்தை விஜய் தேவரகொண்டா நடித்த லைகர் படத்தின் இயக்குனர் பூரி ஜெகன்நாத் இயக்குகிறார். இந்த படத்தில் சஞ்சய் தத் வில்லன் கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இவர் நடிக்கும் முதல் தெலுங்கு திரைப்படம் இதுவே. இந்த படத்தை பூரி ஜெகன்நாத் தயாரிக்க மணி ஷர்மா படத்திற்கு இசையமைக்கிறார். இதில், காவியா தாபர் கதாநாயகியாக அறிமுகமாகிறார்.

இத்திரைப்படம் வரும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி வெளியாகவுள்ளது. படத்தின் டிரைலர் அண்மையில் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. படத்தில் ஒரு அராத்து ரவுடியாக நடித்துள்ளார் ராம் பொதினேனி. சஞ்சய் தத் மூளையை எடுத்து ராம் பொதினேனி மூளையையும் இடம் மாற்றுகின்றனர். இதற்கடுத்து என்ன ஆனது என்பதே படத்தின் கதை. திரைப்படம் தெலுங்கு, தமிழ், இந்தி, மலையாளம், ஆகிய மொழிகளில் வெளியாகவுள்ளது. திரைப்படத்திற்கு தணிக்கை குழு ஏ சான்றிதழ் அளித்துள்ளது. படத்தின் நேர அளவு 2 மணி நேரம் 42 நிமிடமாக உள்ளது. திரைப்படம் ஒரு அதிரடி ஆக்ஷனாக ரசிகர்களுக்கு விருந்து படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இமானே கெலிஃப் பாலின கேலி புகாரில் ஹாரி பாட்டர் எழுத்தாளரும் எலான் மஸ்க்கும்.. என்ன சொன்னார்கள்?



இமானே கெலிஃப் புகாரில் ஹாரி பாட்டர் எழுத்தாளரும் எலான் மஸ்க்கும் இடம்பெற்றுள்ளனர்

ரத்தத்தில் முடிந்த குத்துச்சண்டை

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடந்துமுடிந்த ஒலிம்பிக் போட்டிகளில் அல்ஜீரிய குத்துச்சண்டை வீராங்கனை இமானே கெலிஃப் பின் பாலினம் குறித்த சர்ச்சை விவாதங்களுக்கு வழிவகுத்தது.

66 கிலோ உடல் எடைப்பிரிவின் 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் இத்தாலியின் ஏஞ்சலா கரினி, அல்ஜீரியாவின் இமானே கெலிப்புடன் மோதினார். இதில் இமானே விட்ட குத்தில் கரினியின் மூக்கில் இருந்து ரத்தம் வடிந்தது.

முதல் சுற்றில் 46 வினாடிகள் மட்டும் ஆட்டம் நடந்த நிலையில் கரினி, தொடர்ந்து விளையாட மறுத்தார்.தனது விளையாட்டு வாழ்க்கையில் இவ்வளவு கடினமான குத்துகளை யாரிடமும் வாங்கியதில்லை என்று கண்ணீர் மல்க கூறி வெளியேறினார். இதைத்தொடர்ந்து இமானே கெலிஃப்புக்கு ஆண் தன்மைக்குரிய ஹார்மோன் அதிகம் இருப்பதாக ஏற்கனவே சர்ச்சை கிளம்பியது. ஆனால் ஒலிம்பிக் கமிட்டி அவருக்கு துணை நின்றது. உலகம் முழுவதும் அவருக்கு எதிராகவும் ஆதரவாகவும் சமூக வலைதளங்களில் விவாதங்கள் நடந்தது.

இதற்கிடையே இறுதிப்போட்டியில், சீன வீராங்கனை யாங்க் லியூவை வீழ்த்தி தங்கம் வென்றார் இமானே கெலிஃப். அனைவரையும் போல் தானும் ஒரு முழுமையான பெண்தான் என்று வெற்றிக்குப் பிறகு அவர் தெரிவித்திருந்தார்.

இமானேவின் சட்டப் போராட்டம்

அதைத்தொடர்ந்து , பாலின ரீதியாக சமூக வலைதளங்களில் தன்மீது அவதூறு பரப்பியவர்களை சட்டரீதியாக தண்டிக்க வலியுறுத்தி பிரான்ஸில் இமானே புகார் அளித்தார். மேலும் இமானே கெலிஃப் பாலின கேலி புகாரில் ஹாரி பாட்டர் எழுத்தாளரும் எலான் மஸ்க்கும்!.. சொன்னது என்ன?

வழக்கு தொடர்ந்து வழக்கறிஞர் மூலம் சட்டப்பூர்வமான போராட்டத்தை முன்னெடுப்பதில் அவர் தீவிரம் காட்டி வருகிறார்.

இந்நிலையில் இமானே அளித்துள்ள புகாரில் தொழிலதிபர் மற்றும் எக்ஸ் உரிமையாளர் எலான் மஸ்கின் பெயரும் ஹாரி பாட்டர் நாவல் தொடர்களை எழுதிய பிரபல எழுத்தாளர் ஜே.கே.ரௌலிங் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

மஸ்க் ரௌலிங் சொன்னது என்ன?

போட்டிகளின் போது இமானேவின் பாலினம் குறித்த சர்ச்சை எழுந்தபோது, எலான் மஸ்க், தனது எக்ஸ் பக்கத்தில், ஆண்களுக்கு பெண்களின் விளையாட்டில் இடமில்லை என்று இமானேவை விமர்சித்த பதிவை ரீபோஸ்ட் செய்து கண்டிப்பாக என்று மஸ்க் தெரிவித்திருந்தார். மேலும் ஜே .கே ரவுலிங் தனது எக்ஸ் பதிவில், 'இமானே குத்துச்சண்டை களத்தில் இருக்கும் புகைப்படத்தைப் பதிவிட்டு, இதை பார்த்துவிட்டு, உங்களின் பொழுதுபோக்குக்காக ஒரு பெண்ணை ஆண் அடிப்பதை பற்றி விளக்கம் கொடுங்கள். சிவப்பு பனியன் அணிந்த அந்த ஏமாற்றுக்காரரை அனுமதித்தது முழுக்க முழுக்க நிர்வாகத்தின் தவறு, இது பெண்களுக்கு எதிராக ஆண்கள் தங்களின் சக்தியைக் காட்டிக்கொள்ளும் செயல்' என்று தெரிவித்துருந்தார். எலான் மஸ்க் மற்றும் ஜெ.கே.ரௌலிங் ஆகிய இருவரும் தன்பாலின ஈர்ப்பு உள்ளிட்ட lgbtq சமூகத்தினருக்கு எதிராக தொடர்ந்து பேசி வருவது குறிப்பிடத்ததக்கது .

## மத்திய அரசு ஒலிம்பிக் போட்டிக்காக ரூ.1.5 கோடி வழங்கியதா? அஸ்வினி மறுப்பு



பாரீஸ் ஒலிம்பிக்கில் பேட்மின்டன் ஆட்டத்தில் 7 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்றது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தப் போட்டியில் ஒரு பதக்கம் கூட வெல்ல முடியாமல் போனது ஏமாற்றமே.

இதில் லக்ஷயா சென் வெண்கலப் பதக்கத்துக்கான போட்டி வரை வந்து தோற்றார். சாத்விக்சிராஜ் ஜோடி கால் இறுதியில் வெளியேறியது. இதே போல பி.வி.சிந்துவும் கால் இறுதியில் தோற்றார்.

பெண்கள் இரட்டையர் பிரிவில் அஸ்வினி பொன்னப்பாதனிஷா கிரஸ்டோ ஜோடி 3 ஆட்டத்திலும் தோற்று தொடக்க சுற்றிலேயே வெளியேறியது.

இந்த நிலையில் ஒலிம்பிக்கில் பங்கேற்ற இந்திய பேட்மிண்டன் வீரர்களுக்கு வழங்கப்பட்ட தொகை குறித்து தகவல் வெளியாகி இருந்தது. பிரணாய்க்கு ரூ.1.8 கோடி வழங்கப்பட்டதாகவும், அஸ்வினி பொன்பப்பாதனிஷா கிரஸ்டோ இருவருக்கும் தலா ரூ.1.5 கோடி வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டு இருந்தது.

இதை அஸ்வினி மறுத்துள்ளார். யார் ரூ.1.5 கோடி வழங்கியது என்று கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில் கூறி இருப்பதாவது:

உண்மையை சரியாக பெறாமல் எப்படி அந்த தகவலை வெளியிட முடியும்? இப்படி ஒரு பொய்யை எவ்வாறு கூறலாம். தலா ரூ.1.5 கோடியா? யாரிடமிருந்து? எதற்காக? எனக்கு இந்த தொகை வழங்கப்படவில்லை.

நிதியுதவிக்காக எந்த அமைப்பிலோ அல்லது ஒலிம்பிக் பதக்க இலக்க திட்டத்தின் ஒரு பகுதியாகவோ நான் இருக்கவில்லை. கடந்த ஆண்டு நவம்பர் வரை நான் கலந்து கொண்ட போட்டிகளுக்கு எனக்கு நானே நிதியுதவி செய்தேன். அணியில் இணைவதற்கான தகுதியை அடைந்த பிறகுதான் இந்திய அணியுடன் போட்டிகளுக்கு அனுப்பப்பட்டேன். பாரீஸ் ஒலிம்பிக்குக்கு தகுதி பெற்ற பிறகுதான் நான் இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டேன், அவ்வளவுதான். எங்களுடைய பயிற்சியாளரும் எங்களோடு பயணம் செய்ய வேண்டும் என்று நாங்கள் முன்வைத்த கோரிக்கை கூட நிராகரிக்கப்பட்டது". இவ்வாறு அஸ்வினி பொன்னப்பா கூறியுள்ளார்.

## வினேஷ் போகத் விவகாரம்: நாளை தீர்ப்பு ஒத்திவைப்பு

இந்திய அணியின் ஆல் ரவுண்டரான சிவம் துபே 2021 ஆம் ஆண்டு தனது நீண்ட நாள் காதலியான அஞ்சும் கானை திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்கு பின்பும் அஞ்சும் கான் இஸ்லாம் மதத்தையே பின்பற்றி வருகிறார். இந்நிலையில், அஞ்சும் கான் பாஜகவின் சிறுபான்மை பிரிவு தலைவர் நசியா கானை விமர்சித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். அந்த பதவியில், முகமது நபிக்கு எதிராக தொடர்ச்சியாக நசியா கான் பேசி வருகிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று #arrestnaziaelahikhan என்ற ஹேஸ்டேக் உடன் அவர் பதிவிட்டிருந்தார். அந்த பதிவு வைரலானதை தொடர்ந்து அவர் அந்த பதிவை நீக்கிவிட்டார். தற்போது அந்த பதிவிற்கு பாஜகவின் சிறுபான்மை பிரிவு தலைவர் நசியா கான் பதில் அளித்துள்ளார். அவரது பதிவில், நீங்கள் ஒரு இந்துவை திருமணம் செய்துள்ளீர்கள்.



நீங்கள் இப்போது இஸ்லாத்தின் ஒரு பகுதி அல்ல. எனக்கு எதிரான வன்முறையை தூண்டும் பொய்யான தகவலை நீங்கள் வெளியிட்டுள்ளீர்கள். பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா, துபேவை கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் பதிவிட்டுள்ளார். அவர் தனது பதிவில் பிசிசிஐ, உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் டெல்லி காவல்துறையை டேக் செய்துள்ளார்.

## இந்தியா வரும் வங்காளதேசம், இங்கிலாந்து அணிகள்.. அட்டவணையை மாற்றிய பிசிசிஐ



இந்திய அணியின் உள்நாட்டு கிரிக்கெட் தொடர்களுக்கான அட்டவணையை பிசிசிஐ மாற்றியமைத்துள்ளது. மாற்றப்பட்ட அட்டவணைப்படி இந்தியா மற்றும் வங்காளதேசம் அணிகள் இடையிலான முதலாவது டி20 போட்டி அக்டோபர் 6 ஆம் தேதி குவாலியரில் நடைபெற இருக்கிறது.

முன்னதாக இந்த போட்டி தரம்சாலாவில் நடைபெற இருந்தது. இதே போன்று இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரிலும் அட்டவணையை மாற்றியமைத்துள்ளது.

மாற்றப்பட்ட அட்டவணை:

அடுத்த மாதம் இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வங்காளதேசம் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், மூன்று போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாட உள்ளது.

இதில் செப்டம்பர் 19 ஆம் தேதி துவங்க இருந்த முதலாவது டெஸ்ட் போட்டி செப்டம்பர் 23 ஆம் தேதி துவங்கும் என்று பிசிசிஐ அறிவித்துள்ளது. இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி செப்டம்பர் 27 ஆம் தேதி நடைபெற இருந்த நிலையில், தற்போது அக்டோபர் 1 ஆம் தேதி நடைபெற இருக்கிறது. இதேபோன்று முதலாவது டி20 போட்டி அக்டோபர் 6 ஆம் தேதியும், மற்ற இரண்டு டி20 போட்டிகள் முறையே அக்டோபர் 9 மற்றும் அக்டோபர் 12 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கிறது. வங்காளதேசத்தை தொடர்ந்து அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாட இருக்கிறது. இந்தியா இங்கிலாந்து அணிகள் இடையே ஐந்து போட்டிகள் கொண்ட டி20 தொடர், மூன்று போட்டிகள் அடங்கிய ஒருநாள் தொடர் நடைபெற இருக்கிறது. இதில் டி20 தொடர் ஜனவரி 22, ஜனவரி 25, ஜனவரி 28, ஜனவரி 31 மற்றும் பிப்ரவரி 2 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கிறது. இரு அணிகள் இடையிலான ஒருநாள் தொடர் பிப்ரவரி 6 ஆம் தேதி முதல் போட்டியும், பிப்ரவரி 9 மற்றும் பிப்ரவரி 12 ஆகிய தேதிகளில் மற்ற இரண்டு போட்டிகள் நடைபெற உள்ளன.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.